இந்தியாவிலேகூட ஏனைய மாநிலங்களுக்கும் மாம்பழம் அனுப்பப்படுகிறது. வட ஆற்காடு, சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் பிற மாநிலங்களுக்கு மாம்பழத்தை ஏற்றுமதி செய்கின்றன. வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து நாக்பூர், பம்பாய், கல்கத்தா, டெல்லி, அம்ரோடி, கந்த்வா, அகோலா, ஜால்கான், ரெய்பர், பிலாஸ்பர், உஜ்ஜெயின் முதலிய இடங்களுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மாம்பழத்தில் பெருமளவு மைசூர் மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பம்பாய்க்கும் சிறிதளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலிருந்து பம்பாய், கேரளம், ஆகிய மாநிலங்களுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஆக, இந்த மாவட்டங்களிலிருந்து இந்தியாவிலுள்ள பல மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மாம்பழத்தின் மொத்த அளவு ஆண்டொன்றுக்குக் கிட்டத்தட்ட 34 ஆயிரம் டன் என மதிப்பிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் தேயிலை உற்பத்தி

* 145 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தேயிலை உற்பத்தியைப் பெருக்குவதற்குப் புதிதாக இடங்களை அரசு தேர்ந்தெடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம். நீலகிரி மாவட்டத்தில் தேயிலையை மும்முரமாகப் பயிரிடுவதற்காக உழவர்களுக்கு நிலவள வங்கிகள் மூலம் நீண்டகாலக் கடன்கள் வழங்குவதற்கான திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. பம்பாய், வேளாண்மை மறுநிதிக்கழகத்தின் நிதி உதவியுடன் இத் திட்டம் செயல்படுகிறது. இந்திய அரசின் நிதி உதவியுடன் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்களுக்காக ஒரு திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது.

(இ) விவர அறிக்கை : ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, தேயிலை வாரியத்திடமிருந்து உரிமம் பெறுவதில் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளனவா ? இத்திட்டம் நிறைவேற்ற எடுத்துக்கொண்ட முதல் ஆண்டில் என்ன இடர்பாடுகள்? அரசாங்கமே சொந்தமாகத் தேயிலை உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் புதிய இடங்களைத் தேர்ந்தெடுத்து தேயிலை பயிரிடப் போவதாக செய்தி கிடைத்திருக்கிறதே, அது உண்மையா ?

---

*ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, முதலிலே 50 லட்சம் ரூபாய் செலவிலே பம்பாய், வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் உதவியுடன் இத்திட்டம் செயல் படுகிறது. இலங்கையிலிருந்து தாய்நாடு திரும்புபவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் நடவடிக்கையாக, பத்து ஆண்டுக் கால அளவில், ரூ. 92,71,000 மொத்தச் செலவில் நீலகிரி மாவட்டத்தில் 750 ஏக்கரில் தேயிலை பயிரிடுவதற்கான பணித்திட்டம் ஒன்றை இந்திய அரசாங்கம் ஏற்பளித்துள்ளது. இந்தத் திட்டத்திற்கு மாநில அரசாங்கத்தின் நிதியிலிருந்து உதவி ஒன்றும் செய்யவில்லை.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, தேயிலை உற்பத்தியினை நீலகிரி மாவட்டத்தில் ஏற்படுத்தியுள்ளதுபோல், சுமார் மூவாயிரம் அடிக்கு மேலே இருக்கிற வெள்ளியங்கிரி மலைப் பகுதியில் தேயிலை பயிர் செய்வதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : கொடுத் திருக்கிற விவர அறிக்கையில் நீலகிரி மாவட்டத்திலே சேரம்பாடி, கூனூர், சேரங்கோடு ஆகிய இடங்களில் தவிர மற்ற இடங்களில் இத்திட்டம் இடம்பெறவில்லை. கோயமுத்தூர் மாவட்டத்தில் ஆனைமலைப் பகுதியில் தேயிலைத் தோட்டம் அமைக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திய பிறகுதான் இது எடுத்துக்கொள்ளப் படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, தேயிலை உற்பத்தி செய்வதற்கு கன்னியாகுமரி மாவட்டக் காடுகளிலே போதிய இடங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதிக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறிப்பு எதுவும் தற்போது இல்லை. இப்போது நீலகிரிப் பகுதியிலும், கோயமுத்தூர் ஆனைமலைப் பகுதியிலும்தான் இத்திட்டம் இருக்கிறது.

திரு. நா. கிருட்டிணன் : தலைவர் அவர்களே, தற்போது தமிழ் நாட்டில் எவ்வளவு பரப்பளவில் தேயிலை பயிர் செய்யப்படுகிறது ? இந்தியாவில் தேயிலை பயிராகும் பரப்பளவில் இது எத்தனை சத வீதம் ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. சோ. கருணைநாதன் : தலைவர் அவர்களே, தேயிலை உற்பத்தி செய்யும் திட்டம் நீலகிரி மாவட்டத்திலே எந்தெந்த இடங்களில் இருக்கிறது ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, நீலகிரியில் கிட்டத்தட்ட 643 ஏக்கர் இடமும், குந்தா, கூனூர், கோத்தகிரி பகுதிகளில் 2 ஆயிரம் ஏக்கர் இடமும் இத்

திட்டத்திற்காக எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது. பம்பாய் வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் உதவியுடன் 643 ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாழை உற்பத்தி

* 146 வினு—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வாழை (Banana) உற்பத்தியைப் பெருக்கு வதற்குப் புதிய திட்டங்கள் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : குட்டை பச்சை வாழை வகைகளை முனைந்து பயிரிட வகை செய்வதற்காக, வாழை பயிரிடுமுனைப்புத் திட்டம் ஒன்று வட ஆற்காடு, திருச்சிராப் பள்ளி, மதுரை, செங்கற்பட்டு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், தூத்துக்குடியிலும், அதைச் சுற்றிலும் பொதுவாக வாழை பயிரிடுவதற்கான முனைப்புத் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பொதுவாக வாழை போன்ற பயிர்கள் புயல், காற்று போன்ற சேதங்களினுல் பாதிக்கப்படுகின்றன. குட்டை வாழை இனங்களை அதிகரிக்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் முயற்சியை வரவேற்கிறேன். அதோடு, குறைந்த தண்ணீரைக்கொண்டு வாழையைப் பயிரிடும் திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா ? குட்டை இன வாழை யைப் பயிரிட அரசு ஏதாவது மான்யம் அல்லது கடன் வழங்கும் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, குறைந்த தண்ணீரைக்கொண்டு வாழையைப் பயிரிடும் திட்டம் குறித்த விவரக் குறிப்பு ஒன்றும் தற்போது இல்லை. வாழை பயிரிடும் குடியானவர்களுக்குப் பண்ணைத் திட்டம் வகுக்கப்பட்டு, கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் அவசியமான கடன் வசதிகள் செய்துதரப்படுகின்றன. தற்போது தலைக்கு 2 ஆயிரம் ரூபாய் என்ற மேல் வரம்புக்குட்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு 500 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை சொந்தப் பொறுப்பின்மேல் கடன் வழங்கப்படுகிறது. இதில் ஏக்கர் ஒன்றுக்கு 250 ரூபாய் முதல் 500 வரை ரொக்கமாகக் கொடுக்கப்படுகிறது. எஞ்சிய தொகை உரம், எருக்கலவை, பயிர் நோய் மருந்துகள் வடிவில் வழங்கப்படுகின்றன.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய மாதிரி குட்டை வாழைகள், பச்சை வாழைகள் நம் நாட்டில் ஏராளமாகப் புதிது புதிதாக உண்டாகின்றன. நெற் பயிர் களுக்குப் பெயர் வைப்பதுபோல இந்தப் புதிய வாழைகளுக்கும் பெயர் வைக்க இந்த அரசாங்கம் முன்வருமா ? வல்லம்படுகை பக்கத்தில் பச்சை வாழைகள் அதிகம் இருப்பதினுல் அங்கே அதிக உதவி அளிக்க இந்த அரசாங்கம் முன்வருமா ? எத்தனைவிதமான வாழைகள் நம் நாட்டில் இருக்கின்றன ?